1975 ஏப்ரல் 5]

(13) பண்டகசாலைப் பணியாளர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சிறப்புப்படி வழங்க அனுமதிக்கப்பட்டது :—

(1) பண்டகசாலைக்காப்பாளர் சிறப்புத் தரம்/ பண்டகசாலைக் காப்பாளர் ரூ. 75

(2) பண்டகசாலைக் காப்பாளர் தரம் ரூ. 60

(3) பண்டகசாலைக்காப்பாளர் தரம் ரூ. 45

(14) 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் சராசரி சம்பளத்தில் 33/80 என்ற வீதத்தில் உயரளவு ஓய்வூதியத் தொகையும், அவர்களின் சராசரி சம்பளத்தில் 16½ பங்கு சிறப்பு-ஓய்வு பணிக்கொடையும் பெறத் தகுதியுடையவர்களாவர் ;

(15) இறப்பு-ஓய்வு பணிக்கொடையின் பேரளவு வரம்பான ரூ. 24,000 என்பது நீக்கப்பட்டுள்ளது ;

(16) பணியாளர்களின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப் பளிப்பதற்காக அலுவலக உதவியாட்கள் சங்கத்தின் Helpers association நெடுநாளையக் கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு மின் வாரியத் தொழிலாளர்கள் சங்கத்துடன் 1970 மே திங்களில் செய்து கொண்ட உடன்பாட்டையொட்டி, மின் வாரியத் தொழிலாளர்களுக்கு 1—12—1969 முதல் அனுமதிக்கப் பட்ட அகவிலைப்படி வீதங்கள் வருமாறு :—

சம்பள வரையறை. (1)	அகவிலைப்படி (2)
ரூ. 90-க்குக் குறைவாக	ரூ. 85
ரூ. 90-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 150-க்குக் குறைவாக.	ரூ. 98
ரூ. 150-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 210-க்குக் குறைவாக.	ரூ. 122
ரூ. 210-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 400-க்குக் குறைவாக.	ரூ. 146
ரூ. 400-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 450-க்குக் குறைவாக.	ரூ. 160
ரூ. 450-ம் அதற்கு மேற்பட்டு ஆனால் ரூ. 500-க்கு மேற்படாமல்.	ரூ. 164
ரூ. 500-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 543-க்கு மேற்படாமல்.	ரூ. 664-க்கு எந்த அளவுக்குத் தொகை குறைகிறதோ அத் தொகை.
ரூ. 544-ம் அதற்கு மேற்பட்டும் ரூ. 750 வரை.	ரூ. 120

மேற்சொன்ன உடன்பாட்டின் அடிப்படையில், கடந்த ஆண்டின் சராசரி எண்ணிக்கையின் அடிப்படையில் கீழே நான்கு முறை மேற்சொன்ன அகவிலைப்படி வீதங்கள் அதிகரிக்கப் பட்டன :—

1. 1—4—1970 முதல்	ரூ. 3·00
2. 1—4—1971 முதல்	ரூ. 6·75
3. 1—4—1972 முதல்	ரூ. 4·50
4. 1—4—1973 முதல் 31—9—1973 வரை.	ரூ. 9·00
மொத்த அதிகரிப்பு ..	ரூ. 26·25

4. முந்தைய காலாண்டிற்கான சராசரி எண்ணிக்கை அதிகரிப்பின் அடிப்படையில், ஒப்பந்தக்கால அளவு முடிவடைவதற்கு 14 மாதங்களுக்கு முன், அதாவது 1—10—1973 முதல் அகவிலைப்படி வீதங்களை காலாண்டு அடிப்படையில் திருத்தியமைக்க வாரியம் ஒப்புக் கொண்டது. 1—10—1973 முதலும் 1—1—1975 அன்றுள்ளபடியும் செயலுக்கு வந்த காலாண்டு அடிப்படையிலான திருத்த அகவிலைப்படி கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

சம்பள வரையறை	1—10—73 முதல் 31—12—73 வரை திருத்திய வீதங்கள்.	1—1—75முதல் 31—3—75 வரை திருத்திய வீதங்கள்
(1)	(2)	(3)
ரூ. 90-க்குக் குறைவாக	141.25	205
ரூ. 90-149	154.25	218
ரூ. 150-209	178.25	242
ரூ. 210-399	202-55	266
ரூ. 400-449	216.225	280
ரூ. 450–500	220.25	284
ரூ. 501.543	720.25க்குக் குறைகிற தொகை.	784க்குக் குறைகிற தொகை.
ரூ. 544 முதல் ரூ. 750 வரை.	176.25	240

கரலாண்டு அடிப்படையில் மாறுபட்ட அதிகவிலைபபடிக்கு அனுமதி வழங்கியதின் காரணமாக ரூ. 750 வரையில் சம்பளம் பெறும் ஊழியர்கள் அனைவருக்கும் கீழே குறிப்பிட்டுள்ள வகையில் அகவிலைப்பட்டியல் உயாவு அளிக்கப்பட்டுள்ளது.

1—10—73 முதல் 31—12—73 வரை மாதமொன்றுக்கு ரூ.33
1—1—74 முதல் 31—3—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 9
1—4—74 முதல் 30—6—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 8.25
1—7—74 முதல் 30—9—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 18.
1—10—74 முதல் 31—12—74 வரை மாதமொன்றுக்கு ரூ. 21.75
1—1—75 முதல் 31—3—75 வரை மாதமொன்றுக்கு ரூ. 6.75
மொத்த உயர்வு ரூ. 96. 75 ஆகும். இது கணிசமான தொகையாகும்.

5. மின் தொழிலுக்கான ஊதிய வீதங்களை நிச்சயிக்க ஊதிய ஆலோசனைக்குழு ஒன்றை இந்திய அரசு 1973, ஆகஸ்ட் திங்களில் அமைத்தது. இக்குழுவில் மின்சக்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ளனர். மின் வாரிய ஊழியர்களின் ஊதிய வீதங்கள், சொற்ப நன்மைகள், பதவித் தொடர்பான வசதிகள் ஏனைய பணி நிபந்தனைகள் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்காக தொழிலாளர் சங்கத்திற்கும், மாநில மின்வாரியத்திற்குமிடையே இருதரப்புப் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவும், அத்தகைய பேச்சு வார்த்தைகள் குறித்து குழுவிற்கு ஆலோசனை நல்கவும் இது ஏற்படுத்தப்பட்டது.

6. ஊதிய வீதங்கள், படிகள் ஆகியவற்றைத் திருத்தியமைப்பது குறித்து வாரிய அதிகாரிகள் குழுவொன்று 1—12—1974 முதல் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் பணி அளவு குறித்து இக்குழு ஆய்வு செய்யும், உடன்பாடு ஒன்று காண்பதற்கு, ஏற்பளிக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்களுடன் தமிழ்நாடு மின்வாரியம் முதலில் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. இதுவரை ஏற்பளிக்கப்பட்ட சங்கங்களுடன் ஆறுமுறை பேச்சு வார்த்தை நடத்தப்பட்டுள்ளது. ஏற்பளிக்கப்படாத ஏனைய சங்கங்களுடன் வாரியம் மேற்கொண்டும் பேச்சு வார்த்தை நடத்தக் கருதியுள்ளது. மத்திய அரசு அமைத்துள்ள ஆலோசனைக் குழு இது குறித்துப் பரிசீலிப்பதற்காகக் காத்திராமல் இதை விரைவில் முடிவு செய்ய எல்லாவித முயற்சியும் எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATURE LIBRARY
24 OCT 1975

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

TAMIL NADU LEGISLATURE 25 OCT 1975 MADRAS

திங்கட்கிழமை, 1975 ஏப்ரல் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. அப்பு அவர்கள் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீத்தார் நினைவுக் குறிப்பு. 1952 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை சேவயூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஏ. அப்பு அவர்கள் 5—4—1975 ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(அவையினர் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

திருவள்ளுவர் படம்

*561 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் திருவள்ளுவர் படம் கண்டிப்பாக மாட்டப்பட வேண்டுமென்று அரசு சுற்றறிக்கை பிறப்பித்துள்ளதா?